அன்பான பெற்றோருக்கு,

**பள்ளி மாணவர்களின் முதல் மொழி பற்றி சேகரித்தல் மற்றும் பதிவுசெய்தல்**

உங்கள் குழந்தையின் முதல் மொழி பற்றி கேட்கும் ஒரு படிவத்தை நான் இணைத்திருக்கிறேன். உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப் பருவத்தில் அவருக்கு முதலில் அறிமுகமானது இந்த மொழியாகும். அவர்கள் தொடர்ந்து பயன்படுத்தும் அல்லது, வீட்டில் அல்லது உங்களது சமூகத்தில் பயன்படுத்தப்படும் மொழியாகும் இது.

உங்கள் குழந்தையின் முதல் மொழி ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஒரு மொழியாக இருக்குமானால், தயவு செய்து இந்த மொழியைப் பதிவு செய்யவும். உங்கள் குழந்தை எவ்வளவு நன்றாக ஆங்கிலம் பேசுகிறார் என்பது பற்றியது இல்லை கேள்வி.

உங்கள் குழந்தையின் வயது 11 அல்லது அதற்கு கீழ் என்றால், அவர்களுக்காக நீங்கள் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். அவருடைய வயது 11 முதல் 15 என்றால், படிவத்தைப் பூர்த்தி செய்ய அவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டும். அவருடைய வயது 16 அல்லது அதற்கு மேல் என்றால், அவர் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இணைக்கப்பட்டு இருக்கும் உறையில் வைத்து, அல்லது பள்ளி அலுவலகத்துக்கு அனுப்புவதன் மூலமாக அல்லது எடுத்து வருவதன் மூலமாக (அல்லது மின்னஞ்சல் வழியாக அது உங்களுக்கு அனுப்பப்பட்டு இருந்தால் அந்த வழியில்) படிவத்தை எனக்கு திருப்பி அனுப்புங்கள். படிவத்தை பூர்த்தி செய்வதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் தயவு செய்து பள்ளி அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் தரும் தகவல் இரகசியமாக வைக்கப்படும். உங்கள் குழந்தை பற்றிய மேம்பட்ட தகவலைப் பள்ளிக்குத் தருவதற்கு அது பயன்படுத்தப்படும். அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களுடைய உள்ளார்ந்த ஆற்றலை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு இருப்பதை உறுதி செய்வதற்கு எங்களுக்கு உதவிட அது பயன்படுத்தப்படும்.

தனிப்பட்ட குழந்தைகளை அடையாளம் காண வழி செய்யும் விதத்தில் இந்த தகவல் வெளியீடு செய்யப்பட மாட்டாது. வேறு எந்த நோக்கத்துக்காகவும் இந்தத் தகவல் பயன்படுத்தப்பட மாட்டாது. உள்ளூர் மற்றும் தேசிய புள்ளிவிவரக் கணக்குகளுக்காக இந்தத் தகவல் உள்ளூர் அரசாங்க அமைப்பு மற்றும் DfES-க்கு அவ்வப்போது  கொடுக்கப்படும்.

உங்கள் குழந்தை மாறிச் செல்லும் வேறு எந்த பள்ளிக்கும் உங்கள் குழந்தையின் முதல் மொழி பற்றிய பற்றிய தகவல், அது பற்றி மீண்டும் உங்களிடம் கேட்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகக் கொடுக்கப்படும்.

உங்கள் குழந்தையின் முதல் மொழி பற்றிய தகவலை சரி பார்க்க எந்த சமயத்திலும் நீங்கள் கேட்க முடியும். நீங்கள் விரும்பினால், தகவலை மாற்றுமாறு அல்லது நீக்குமாறு கேட்க முடியும்.

உங்கள் உதவிக்கு மிக்க நன்றி.

உங்கள் உண்மையுள்ள,